பக்கங்கள் நான்கு | விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 76 பிரமோதூத தை 29
பெப்ருவரி 11, 1991 திங்கட்கிழமை

## அம்புலன்ஸில் குழந்தையை அனுப்ப டீசல் கேட்கப்பட்டது!

உயிருக்காகப்போராடிக்கொண்டிருந்த பத்துமாதக் குழந்தை ஒன்றை வேறு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுங்கள் என துண்டு வெட்டி விட்ட சம்பவம் ஒன்று நேற்று சாவகச்சேரி வைத்திய சாலையில் நடைபெற்றது. மனிதாபிமான அடிப்படையில் தாமாகவே அம்புலன்ஸ் மூலம் அந்த குழந்தையை வேறு வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டிய அந்த வைத்தியசாலை நிர்வாகம் அனுப்புவதற்கு பதிலாக துண்டு வெட்டி விட்டு ஐந்து லீற்றர் டீசல் — 04 ஆம் பக்கம் பார்க்க

# கிழக்கின் காடுகள் நோக்கி மீண்டும் பாரிய தாக்குதல்!

## மட்டக்களப்பில் துருப்புகள் குவிப்பு

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் பாரிய ஒரு இராணுவ நடவடிக்கையை வெகுவிரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள காட்டுப்பகுதிகளில் ஏற்கனவே திட்டமிடப்பட்ட சில இலக்குகளை குறிவைத்தே படையினர் செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மேலதிகமாக துருப்புகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இதனிடையே இந் நடவடிக்கைக்கு முன்னோடியாக மட் .04 ஆம் பக்கம் பார்க்க

## இராமசாமி வைத்தியசாலை மீது விமானக் குண்டுவீச்சு

கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் உள்ள இராமசாமி வைத்தியசாலை மீது இரண்டு பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்தின

நேற்றுக்காலை 11.45 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலில் எஸ். பரமேஸ்வரி 60) என்ற மூதாட்டி இதல்த்திலேயே கொல்லப்பட்டார்.

டாக்டர் இராமசாமி — 04 ஆம் பக்கம் பார்க்க

## பூப்புனித நீராட்டு விழாவைக் குறிவைத்து கொக்குவிலில் குண்டுவீச்சு

நேற்றுக்காலை பதினொரு மணியளவில் கொக்குவில் நந்தாவில் பகுதியிலும் பொம்மர்கள் தாக்குதல் நடாத்தின.

நந்தாவில் சம்பியன் ஒழுங்கையில் வீடொன்றில் அச்சமயம் பூப்புனித நீராட்டுவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு கூடியிருந்த பொது மக்களை நோக்கிக் குண்டு வீசப்பட்டது இதனால் —04 ஆம் பக்கம் பார்க்க

## சங்குவேலியிலும் குண்டு வீச்சு ஏழு வீடுகள் சேதமடைந்தன

நேற்றுக் காலை 10. 45 மணியளவில் சங்குவேலிப் பகுதியில் 2 பொம்மர்கள் 4 குண்டுகளை வீசின.

இவற்றில் 3 குண்டுகள் இங்குள்ள டச்சு வீதியில் உள்ள அரசகுலரத்தினம், இரத்தினேஸ்வரன், முருகேசம்பிள்ளை ஆகியோரின் வீடுகளில் விழுந்து வெடித்தன.

இத்தாக்குதலால் மோ. இந்திராணி (26வயது) தலையில் —04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் ஷெல் தாக்குதலில் யாழ்ற்றன் கல்லூரி சேதம்

நேற்றுமுன்தினம்காரைநகர் கடற்படைமுகாமிலிருந்துஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மலசலகூடப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததனால் இரண்டு வகுப்புக்கள் பலத்த சேதமடைந்தன.

அன்று விடுமுறை தினமான படியால் பெருமளவு உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ப-31)

## புடவைக்கட்டு முகாம் ராணுவம் மீது தட்டக்கல்லில மற்றுமோர் தாக்கு

திருகோணமலை மாவட்டம் தட்டக்கல் பகுதியில் மீண்டும் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் புடவைக்கட்டு ராணுவ முகாமில் இருந்து ராணுவத்தினர் குச்சவெளி முகாமிற்கு வாகனங்கள் சகிதம் சென்றபோது புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர் இதில் படையினருக்கு —04 ஆம் பக்கம் பார்க்க

## உப்பள ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க நடவடிக்கை

யுத்தம் தொடங்கியதில் இருந்து இதுவரை சம்பளம் இன்றி அவதியுறும் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, செம்மணி, நிலாவெளி உப்பளங்களில் பணிபுரியும் நானூறு நிரந்தர ஊழியர்களுக்கு விரைவில் சம்பளம் வழங்கப்படும் என கைத்தொழில் அமைச்சின் செயலாளர் கே. சி. லோகேஸ்வரன் தெரி —04 ஆம் பக்கம் பார்க்க

## நொச்சிமோட்டையில் மோதல் சிறுவன் பலி

நேற்றுக்காலை 6.30 மணியளவில் நொச்சிமோட்டை, ஓமந்தைப் பகுதிகளில் இரு பொம்மர்களும், ஹெலியும் கடும் தாக்குதலை நடாத்த இராணுவம் முன்னேற முயன்றது.

இதனையடுத்து புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நொச்சிமோட்டையில் மோதல் ஏற்பட்டது.

இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டினால் யோ. பிரதீபன் (12) என்ற சிறுவன் பலியானான், சிவஞானம் (36). என்பவர் காயமடைந்தார். மேலும் சிலர் இறந்திருக்கலா என அஞ்சப்படுகிறது. (74,33)

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட விஞ்ஞான பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சை மீண்டும் 13 ஆம், 14 ஆம் 15 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே இம்மாதம் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் இது நடைபெற்றபோதிலும் பலர் சமூகமளிக்காததால் மீண்டும் நடைபெறுவதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ப 6)

## நாயன்மார்கட்டில் தும்புத் தொழிற்சாலை

நாயன்மார்கட்டு, பாரதி சனசமூக நிலைய மாதர் சங்கத்தின் ஆதரவுடன் தும்புத் தொழிற்சாலை நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதனால் பல யுவதிகளுக்கு இங்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவுள்ளது. (35)

## வட -கிழக்கு மாகாணத்தில பல்கலைக்கழக கல்லூரிகள்

வடக்கு கிழக்கு பகுதிகளில் பல்கலைக்கழக கல்லூரிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன,

க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் நிலையிலான பயிற்சி, க. பொ. த. உயர்தர மாணவருக்கு டிப்ளோமா பயிற்சி என்பன இங்கு நடைபெறவுள்ளன.

நாடு முழுவதும் ஒன்பது பல்கலைக்கழக கல்லூரிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (74)

## பரந்தன் இரசாயன ஆலை அம்பாந்தோட்டைக்கு மாறும்?

பரந்தனில் உள்ள இரசாயன தொழிற்சாலை மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையை மூடி அம்பாந்தோட்டையில் புதிதாக ஓர் இரசாயன தொழிற்சாலை ஆரம்பிக்க அமைச்சு மட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## உணவுற்பத்தி

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உணவு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

குறிப்பிட்ட நிலப்பரப்பில் மரக்கறி வகைகள் சிறுதானியங்கள் என்பனவற்றை இச் சங்கம் செய்கை பண்ணி வருகிறது. (38)

## தன்னுயிர் மாய்த்த சிப்பாய்

இராணுவ சென்ரியில் இருந்த சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கொழும்பு மத்திய தந்தி அலுவலகத்தின் மேல்மாடியில் நிகழ்ந்துள்ளது. (ப 06)

## நீர்வேலியில் சிரமதானம்

உலக சுகாதார வாரத்தை முன்னிட்டு நீர்வேலி பிரதேச சபையை உள்ளடக்கிய பல பகுதிகளிலும் இப்பகுதி சன சமூக நிலையங்களினால் பல சிரமதான நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சிரமதான மூலம் மயானங்கள் திருத்துதல், ஒழுங்கைகள் திருத்துதல் போன்ற பல பொதுப்பணிகள் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (23)

## வவுனியா நோக்கி விவசாயிகள்

விவசாயிகள் தமக்குத்தேவையான மண்ணெண்ணெயைப் பெறுவதற்காக தாமே வவுனியா சென்று வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

கோப்பாயைச் சேர்ந்த விவசாயி ஒருவர் மாங்குளத்தில் இரவு தரித்திருந்த போது தான் கொண்டுவந்த எண்ணெயைப் பறிகொடுத்தார். (23)

## தம்பலகாமம் நோயாளர் அவதி

தம்பலகாமம் வைத்தியசாலை வார்டுகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் உணவின்றியும், குடிநீர் இன்றியும், இயற்கைக் கடன் கழிப்பதற்கு வசதியின்றியும், பெரிதும் கஷ்டமுறுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நோயாளர்களால் வெளியில் சென்று உணவு பெறவும் முடியாதுள்ளதாகவும் அறிய வந்துள்ளது. (ப-1)

## மாறுபடும் பாணின் விலை

குடாநாட்டில் வர்த்தக சங்கங்களால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் பல பொருள்கள் விற்பனையாகும் இவ்வேளையில் பாணின் விலை இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுவது பாவனையாளர்களுக்குப் பல சிரமங்களை கொடுப்பதாகத் தெரிகிறது.

ஒரு இறாத்தல் பாண் தெல்லிப்பளை, மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் 8.50 ஆகவும் ஏழாலை, இணுவில் பகுதிகளில் 10 ரூபாவாகவும், மானிப்பாயில் 12 ரூபாவாகவும் வேறுபட்ட விலைகளில் விற்கப்படுகின்றது. இதனால் பாணுக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலை ஏற்படாதா என பாவனையாளர்கள் அங்கலாய்க்கின்றார்கள். (ப-10)

## வவுனியா வங்கியில் புதிய கணக்கு

முல்லைத்தீவு அரசாங்க திணைக்களங்கள் வவுனியா இலங்கை வங்கியில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன நீண்ட மாதங்களாக செயலிழந்ததையடுத்து மேற்படி திணைக்களங்கள் தற்போது வவுனியாவில் வங்கிக் கணக்கை ஆரம்பித்துள்ளனவாம்.

இதனையடுத்து முல்லைத்தீவில் பணப்புழக்கம் அதிகரித்துள்ளதாக முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. வி. கந்தசாமி தெரிவித்தார். (38)

# நீதி விசாரணைகளில் நீண்ட தாமதம்

# மக்கள் மிகக் கவலை என்கிறார் நீதிமந்திரி

''நீதித்துறையில் மக்கள் நம்பிக்கையைக் கொண்டிருக்கக் கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். நீதி விசாரணைகள் தாமதமாவது குறித்து நாட்டு மக்கள் மத்தியில் மிகுந்த விசனம் காணப்படுகிறது''

மேற்கண்டவாறு கூறியிருப்பவர் ஸ்ரீலங்காவின் நீதி, உயர்கல்வியமைச்சராகப் பதவிவகிக்கும் ஏ.ஸி.எஸ். ஹமீதாவார்.

பாராளுமன்றத்தில் குடியியல் நடவடிக்கை முறை (திருத்தம்) சட்டமூலத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய அவர் மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் மாத்திரம் 2 இலட்சத்து 43 ஆயிரம் வழக்குகள் விசாரணையின்றித் தேங்கிக் கிடக்கின்றன. மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 20 ஆயிரம் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. வழக்கு விசாரணை ஒன்று பூர்த்தியாக மக்கள் 10, 15, 20 வருடங்கள் காத்துக்கிடக்க வேண்டியுமுள்ளது என்று சொன்னார்.

இங்கு உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. சிறிபாலடி சில்வா 'கெத்தாராம விளையாட்டரங்குக்கு விளக்குகள் பொருத்த 55 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது. நீதிமன்றப் பிரதிபெடுக்கும் இயந்திரத்திற்கு 85 ஆயிரம் ரூபா செலவிடுவதில் தாமதம் காட்டப்படுகிறது' என்று சுட்டிக் காட்டினார்.

## முல்லைத்தீவில் முத்திரை தட்டுப்பாடு நீங்கியது

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல தபாலகங்களிலும் போதியளவு சகல தரத்திலான முத்திரைகளும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்ட சில தபாலகங்களில் ஆயிரம் ரூபா, ஐந்நூறு ரூபா முத்திரைகளும் விற்கப்பட்டு வருகின்றன.

இம்மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. சு. பரராசசிங்கம் அண்மையில் கொழும்பு சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்து நடவடிக்கை எடுத்ததின் பேரிலேயே இந்த முத்திரைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

## மீனவர் நலன்பேண நடவடிக்கை அவசியம்

''1984 ஆம் வருடத்திய கடல்வலையச் சட்டத்தின் போது மீனவர் வாழ்வுக்கென வழங்கப்பட்ட மீனவர் முத்திரையையும், வலய நிவாரண அட்டை போன்ற நிவாரணப் பத்திரங்களையும் ஆவன செய்யுங்கள்''

மயிலிட்டி கிராமியக் கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு யாழ் அரச அதிபரிடம் மகஜர் மூலம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க அலுவலர்க்கும், கடற்றொழில் அமைச்சுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ப-10)

## மாசிமக இலட்சார்ச்சனை

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய மாசிமக இலட்சார்ச்சனை இம்மாதம் பதினெட்டாம் திகதி திங்கள் முதல் பத்துநாட்கள் வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

பதினோராம் நாளாகிய இருபத்தெட்டாம் திகதி வியாழனன்று ஏகாசித கலசாபிஷேகமும் இடம்பெறவுள்ளது இந்நாட்களில் தினமும் விசேட தீபாராதனை, அர்ச்சனை, ஹோமம் திருமுறை ஓதல் முதலிய கிரியைகள் காலையும், மாலையும் நடைபெறவுள்ளன மாசிமக விசேட உற்சவத்தில் மாசிமகத் தீர்த்தமும், தேவி திருவீதி உலா வருகையும் இடம்பெறும்.

### சிறு விளம்பரம்

#### விற்பனைக்கு

எம்மால் புதிதாக விதாபிக்கப்பட்ட விவசாயப் பண்ணையில் மிளகாய், கத்தரி, கோவா, மலையாளப் புகையிலை போன்ற நாற்றுக்களும் பீற்றூட், கோவா, வெண்டி போன்ற மரக்கறி விதைகளும் விற்பனைக்கு உண்டு. ஓடர் கவனிக்கப்படும். குறித்த தவணையில் வழங்கப்படும் மேலதிக விபரம்: சிவஐங்கரன் விவசாய வற்பனை நிலையம், அராலி மத்தி, வட்டுக்கோட்டை. 02064

#### தேவை

பெண்கள், இருவர்கள், குழந்தைகள் அனைவரதும் உடைகளை மிகவும் நாகரிகமான முறையில் வெட்டித்தைத்துக் கொடுக்கக் கூடிய பெண் ரெயிலர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். ''திருமகள் றேடர்ஸ்'' (கல்வியங்காடு பெற்றோல்செற் எதிரில்) கல்வியங்காடு சந்தையடி கல்வியங்காடு. 02058

வெகுவிரைவில் பொதுத்தேர்தல் ?

## ஜி. கே. மூப்பனார் மதுரையில் சூசகமாக வெளியிட்ட தகவல்

''தமிழக சட்டசபைத் தேர்தலுக்காக அ. இ. அ. தி. மு வுடன் செய்யப்பட்ட தொகுதிப் பங்கீடு உடன்பாடு குறித்து அதிருப்தி நிலவவில்லை'' இந்திராகாங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. ஜி. கே. மூப்பனார் தெரிவித்துள்ளார்.

லோகசபைத் தேர்தலில் தமது கட்சி அதிக தொகுதிகளில் போட்டியிடவேண்டும் என்பதால் சட்டசபைத் தேர்தலில் அதிக இடங்களை அ. இ. அ. தி. மு கவுக்கு விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது என அவர் மதுரையில் அளித்த பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

சட்டசபைத் தேர்தலில் மொத்தம் 234 இடங்களில் 168 இடங்கள் அ. இ. அ. தி. மு. கவுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய தொகுதிகளில் இந்திராகாங்கிரஸ் தன் வேட்பாளர்களை நிறுத்தும்.

பிரதமர் திரு. சந்திரசேகருக்கும், இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்திக்கும் இடையில் கருத்துவேறுபாடு வலுப்பட்டு வருவதாகக் கூறப்பட்டுவரும் இச்சந்தர்ப்பத்தில் திரு. மூப்பனார் வெளியிட்டுள்ள இக்கருத்தானது பொதுத்தேர்தல் வெகுவிரைவில் நிகழக்கூடிய நிலையினை வெளிப்படுத்துவதாகவே உள்ளது என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அமைச்சர் ரேணுகாவும், கணவரும்

## தரகுப் பணம் பெற்றனரா? சபையில் சர்ச்சை

சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்தோ அல்லது அவரது கணவரோ மகாராஜா நிறுவனத்திடமிருந்தோ அல்லது வேறு எந்தவொரு மருந்துப் பொருட்கள் விநியோக நிறுவனத்திடமிருந்தோ தரகுப் பணம் எதுவும் பெற்றார்களா?

இவ் விவகாரம் பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. தானோ தன் கணவரோ அவ்விதம் தரகுப்பணம் எதுவும் பெறவில்லை என்று அமைச்சர் திருமதி ஹேரத் பாராளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றினைக் கிளப்பிப் பேசுகையில் மறுத்தார்.

தன்னைப்பற்றித் தவறான முறைப்பாடுகளைத் தெரிவிக்கும் அனாமதேயக் கடிதங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பது குறித்தே தான் இப்பிரச்சினையைக் கிளப்புவதாக அவர் கூறினார்.

தானோ தன் கணவரோ தரகுப்பணம் பெற்றதாக முறைப்பாடு தெரிவிக்கப் பட்டுள்ளது மிகவும் தவறானதாகும் என்றார் அவர்.

தனது அமைச்சின் பணிகளில் தனது கணவர் எந்த வகையிலும் தலையீடு செய்வதில்லை என்றும் அவருக்கும் தனக்கும் எதிரான தனிப்பட்ட குற்றச்சாட்டுகள் சகலதுமே ஆதாரமற்றவை என்று கூறிய அமைச்சர் தானும் கணவரும் பெற்ற தரகுப பணம் ஸ்டாண்டர்ட் சார்ட்டட் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை என்றும் சொன்னார்.

## கழுதைக்கு மரியாதை செலுத்தும் இந்தியப் பிரதமர்

கழுதை என்றால் நம்மில் பலரும் அது ஓர் சாதாரணமான மிருகம் என்று எண்ணி ஒதுக்கி விடுகிறோம். நமக்குப் பிடிக்காதவர்களை 'மடக் கழுதை' என்று பேசும் பழக்கமும் இருந்து வருகிறது. ஆனால் இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகரோ கழுதை என்றாலே மிகவும் மரியாதை செலுத்துபவராக இருக்கிறார்.

திரு. சந்திரசேகர் கழுதைக்கு மரியாதை செலுத்தும் வழக்கமுள்ளவர் என்று இந்திய சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. தனது பண்ணை வீட்டுக்கு அவர் வரும்போது கோவிலுக்கு அருகில் எழுப்பப்பட்டுள்ள மாலை அணிந்த கழுதைச் சிலையை அவர் வந்து ஒரு தடவையாவது பார்க்காமல் இருக்கமாட்டாராம். அவரைப் பொறுத்தவரை 'கழுதை உழைப்பின் சின்னம்' அதற்கு மரியாதை செலுத்துவதில் என்றும் தப்பில்லை' என்கிறாராம்.

## வலி-வடக்கு மக்கள் அவதி: அரசாங்க அதிபருக்கு மகஜர்

வலி-வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கம் இதன்தலைவர் சி.சிவமகாராசா தலைமையில் யாழ் செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்து வலிவடக்கு மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மகஜர் ஒன்றைக் கையளித்தது.

இந்த மகஜரில் பின்வரும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

- வலி-வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் அனைவருக்கும் வாராந்த இலவச உலர் உணவு கிடைக்க வழி செய்தல்.
- இடம்பெயர்ந்த இம் மக்கள் அகதி முகாமில் இருந்தாலென்ன தனியார் வீடுகளில் இருந்தாலென்ன வருமானம் பார்க்காது சகலருக்கும் இலவச உலர் உணவு வழங்க ஏற்பாடு செய்தல்.
- தொழில் இழந்து வருமானமின்றி கஷ்டப்படுகின்ற மக்களுக்கு மாதாந்தம் பொருளாதார ரீதியாக உதவி செய்தல்.
- பொதுமக்கள் தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத்தினது தொழிற்பரப்பில் இலவச உலர் உணவு பெறுவதில் உள்ள இடர்பாடுகளை நீக்குதல்.
- 3 ஆம் 4 ஆம் 5 ஆம் 6 ஆம் இலவச உணவு முத்திரைகளுக்கான கால எல்லையை நீடித்தல்.
- இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உணவு முத்திரைகளைத் தொலைத்தவர்களுக்கு விஷேட உத்தரவுப் பத்திரத்தின் மூலம் உணவு பெற வழிசெய்தல்.
- கிராமிய வங்கிகள் மூலம் மாதாந்தம் ஒய்வூதியம் பெறுவோர் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இவர்களது ஒய்வூதியத்தினை பணமாகப் பெற்றுக் கொடுக்க விசேட ஒழுங்குகளைச் செய்து வயோதிப காலத்தில் அவர்களது அலைச்சலைக் குறைத்தல். (ப-10)

### தலா 1000/- ரூபா

பருத்தித்துறை இலங்கை வங்கியில் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் வாடிக்கையாளர்களுக்கு தலா 1000 ரூபாபணம் வழங்கப்பட்டு வருகின்றது.

மீண்டும் 13 ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிகளில் பணம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15)

## சிவராத்திரியன்று...

### அச்சுவேலியில்

அச்சுவேலி வடக்கு கதிரொளி சனசமூக நிலையம் நாளை சிவராத்திரி தினத்தன்று பல போட்டி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

திருக்குறள் சிவபுராண மனனப் போட்டி, மற்றும் கட்டுரை, ஓவியம், கவிதைப் போட்டிகளும் நடாத்தப்பட இருக்கின்றன.

போட்டியில் வெற்றிபெறும் முதல் மூன்று பேருக்கு பரிசில்களுடன் சான்றிதழ்களும் வழங்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. (ப-24)

### திருநெல்வேலியில்

யாழ்ப்பாணம் ஸ்ரீ பகவான் சத்யசாயி சேவாசமித்தியினரின் சிவராத்திரி தின சிறப்பு நிகழ்ச்சிகள், திருநெல்வேலியில் உள்ள சேர்பொன் இராமநாதன்வீதியிலுள்ள மண்டபத்தில் நாளை மாலை ஆரம்பமாகவுள்ளன.

### அளவெட்டியில்

அளவெட்டி கும்பழாவளைப்பிள்ளையார் கோயிலில் சிவராத்திரிவிழா மாலை 4 மணி தொடக்கம் நள்ளிரவு 12.00 மணிவரை நடைபெறவுள்ளது.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றம் ஒன்றும் இடம்பெறவுள்ளது. திருமுறைகளில் மேலோங்கி நிற்பது சமூக உணர்வு என சைவப் புலவர் எஸ். செல்லத்துரையும், தத்துவ உணர்வு என யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரனும் பக்தி உணர்வு என கவிஞர் சோ. பத்மநாதனும் வாதிடுவர்.

சுக்லாவின் வருகையின்போது திரை மறைவில் நடந்த சில நிகழ்ச்சிகளை வாசகர்களின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கிறோம்.

## இந்தியா முன்வைக்கும் 'தீர்வு' என்ன?

இந்திய அரசியலில் சமீபகாலங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றின் பின் இலங்கை விவகாரங்களில் இந்தியா மீண்டும் அக்கறை காட்டத்தொடங்கியுள்ளது.

இலங்கை விவகாரங்களில் தலையிடுவதில்லை என்ற கொள்கையை வி.பி.சிங் கடைப்பிடித்தார். அவரின் வெளியேற்றத்திற்குப் பின் ராஜீவ் காந்தி ஆதரவுடன் சந்திரசேகர் பதவிக்கு வந்தார். இப்போது இந்தியாவிற்கு இலங்கை விவகாரங்களில் மீண்டும் அக்கறை பிறந்திருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற செய்தியை இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லா கொண்டுவந்தார். இதன் உட்கருத்து எல்.ரி.ரி.ஈ. யுடனான சண்டையை உடன் நிறுத்திப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் பட வேண்டும் என்பதாகும்.

அரசியல் தீர்வு இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடு இந்த ஒப்பந்தத்தை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொண்ட அதேசமயம், விடுதலைப் புலிகள் ஏற்கவில்லை. இந்நிலையில் அரசியல் தீர்வு என்று இந்தியா சொல்வதன் அர்த்தம் என்ன?

சுக்லாவின் வருகைக்கான சூழலை உருவாக்குவதில் இந்தியத் தூதுவர் ஜா ஈடுபட்டிருந்தார். கொழும்பில் தமிழ்க்கட்சிகளைச் சந்தித்து. இந்தியாவின் நிலையை விளக்கினார். 1987 ஒப்பந்தத்தின்படி சில கடப்பாடுகள் உள என்றும், இந்தியா அவற்றைக் கை நழுவ விட முடியாது என்றும் தூதுவர் குறிப்பிட்டார்.

சுக்லாவும் வந்து சேர்ந்தார். பிரதித் தூதுவர் இல்லத்தில் நடந்த விருந்தில் ஏழுகட்சிகளும் பங்குபற்றின நிரந்தர இணைப்புக்கு இணங்குமாறு ஸ்ரீலங்காவை வற்புறுத்த முடியாது என்றும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவது என்பது 1987 இல் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது என்றும் சுக்லா தெரிவித்தார்.

குடியேற்றம் பற்றிச் சுட்டிக்காட்டிய தமிழ்க் கட்சிகள், இடம் பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவது என்ற போர்வையில், அரசு புதிய குடியேற்றங்களை நடத்துவதாகத் தெரிவித்தன.

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத்து அகதிகள் வேறெந்த முகாமுக்கும் போகாமல், நேரே தத்தம் வீடுகளுக்குச் செல்லும் சூழ்நிலை உருவாகினாலொழிய, இந்தியா அவர்களைத் திருப்பி அனுப்பாது என்றார் சுக்லா

பிரேமதாஸாவுடன் சுக்லா நடத்திய பேச்சுவார்த்தையிலும் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இந்திய நிலைப்பாட்டினை இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட அதே சமயம் விடுதலைப் புலிகள் அப்படியான ஒரு தீர்வுக்கு ஒத்துவரமாட்டார்கள் என்று சுட்டிக்காட்டியதாகத் தெரிகிறது.

பாதுகாப்புப்படையினரின் கருத்துக்குச் செவி மடுக்க வேண்டிய நிலையில் இலங்கை அரசு உள்ளது. தனது இராணுவத்தை இங்கு அனுப்பமாட்டாது என இந்தியா அளித்த வாக்குறுதியை நம்பி இலங்கை அரசு இதைச் செய்வது சாத்தியமே.

# ஈராக் மக்கள் மீது குண்டு வீச்சு: செஞ்சிலுவைக்கு அனுமதி மறுப்பு

ஈராக்கிய பொதுமக்கள் குடியிருப்புகள் மீது அமெரிக்க நேசநாட்டுப்படைகளின் விமானங்கள் நடாத்திவரும் குண்டு வீச்சை நிறுத்தாத வரையில் ஈராக்கிடம் அகப்பட்ட யுத்த கைதிகளை பார்வையிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது என ஈராக்கின் பிரதிப் பிரதமர் ஹமாதி அறிவித்துள்ளார். யுத்தக் கைதிகளை பார்வையிட ஈராக் மறுத்து வருவதாக கடந்த வாரம் செஞ்சிலுவைத் தலைவர் கூறியிருந்தமை தெரிந்ததே.

## விமானத் தாக்குதலே தொடரும்

குவைத்தில் இருந்து ஈராக்கியரை விரட்ட தொடர்ந்து விமானக் குண்டு வீச்சையே நடாத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. சவுதி தலைநகர் ரியாட்டில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக்செனி, ஜெனரல் பவல், சவுதி மன்னர் பாஹ்ட், வளைகுடாவின் அமெரிக்கத் தளபதி ஸ்குவாஸ்கோவ் மற்றும் படைத் தளபதிகளிடையே நடைபெற்ற உயர்மட்ட பாதுகாப்பு மாநாட்டிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தரைத் தாக்குதலும், கடல்வழி தாக்குதலும் ஈராக்கியரை விரட்டியடிக்க அத்தியாவசியமானவை தவிர்க்க முடியாதவை எனினும் தற்போது விமானக்குண்டுவீச்சையே நடாத்துவது என அம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. மாநாட்டின் முடிவுகள் இன்று ஜனாதிபதி புஷ்ஷிடம் வழங்கப்படும். ஈராக் ஜனாதிபதி ஹுசையினின் படைப்பலத்தை தாம் மனதிற் கொண்டுள்ளதாக அமைச்சர் செனி தெரிவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# மதிய உணவு முத்திரை அடுத்தவாரம் வழங்கப்படும்

மாணவர்களின் மதிய உணவிற்காகத் தருவிக்கப்பட்ட மதிய உணவு முத்திரைகள் அடுத்த வாரம் யாழ் - மாவட்டத்தின் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன.

1990 ஜனவரி மாதத்துக்குரிய மதிய உணவு முத்திரைகள் மாத்திரமே இதுவரையில் இங்கு கிடைத்துள்ளன.

பாடசாலை மாணவர்களின் தொகைக்கேற்பப் பங்கீடு செய்யப்பட்டு, அதிபர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன. (47, 12)

# விதவைகளுக்கு சுவிஸ் நிறுவனம் உதவி

இராணுவ நடவடிக்கைகளாலும், வன்செயல்களாலும் கணவரை இழந்த விதவைகளுக்கு நிவாரணப் பணம், சுயதொழில் திட்டத்தின் கீழ் கடன் உதவியும் வழங்கும் வைபவம் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சுவிற்சலாந்து தேசத்தில் உள்ள நிறுவனம் ஒன்று இதற்கான பணத்தை அனுப்பிவைத்துள்ளது. (ப-6)

# மன்னார்- சங்குப்பிட்டி மினிபஸ் சேவை

இன்று 11 ஆம் திகதி முதல் மன்னார்— சங்குப்பிட்டி மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. சங்குப்பிட்டியில் இருந்து இரவு 10 மணிக்கும் மடுவில் இருந்து மாலை 5 மணிக்கும் பஸ் புறப்படும். (ப 35, 33)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 11 - 02- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வளைகுடா செல்லும் ஜப்பானிய விமானங்கள்

# கொழும்பில் எரிபொருள் நிரப்ப அனுமதி 'வழங்கப்படும்?

வளைகுடா செல்லும் ஜப்பானிய விமானங்களும் இலங்கையில் தரையிறங்கிச் செல்லக்கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதரகம் இலங்கை வான் பரப்பை ஜப்பான் பாவிக்கும் உரிமையை வெளியுறவு அமைச்சிடம் கோரியுள்ளது.

வளைகுடாவில் யுத்த அகதிகளை அகற்றும் பணியில் ஜப்பானிய விமானங்கள் ஈடுபடவுள்ளன.

இவ் விமானங்கள் இலங்கையில் தரையிறங்கி எரிபொருள் நிரப்பிச் செல்லும் அனுமதியை இலங்கை வழங்கக் கூடும் என கொழும்பு வட்டாரங்களில் கருதப்படுகிறது. எனினும் இது குறித்து எவ்வித முடிவும் எடுக்கவில்லை என கொழும்பில் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே அமெரிக்க விமான, கடற்படைகள் இலங்கையில் எரிபொருள் நிரப்பத் தரித்துச் செல்ல இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராமசாமி...

வைத்தியசாலை பலத்த சேதமடைந்ததுடன் டாக்டரும் காயங்களுக்குள்ளானார்.

இத்தாக்குதலின் போது கே. குமாரசாமி, கே. கணேசலிங்கம் ஆகியவர்களின் வீடுகளும், எம். ரி. எஸ். ஓட்டுத் தொழிற்சாலையும் சேதமடைந்தன. (33, 70, ப-11)

## உப்பள...

வித்துள்ளார்.

டிசம்பர் வரையிலான சம்பளத்துக்கு 45 லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஒஸ்டின் டயஸ் இதற்கு சிபார்சு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ப- 6)

## புடவைக்கட்டு...

பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

கடந்த புதனன்றும் தட்டக்கல்லில் இதேவிதமாக விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் 9 படையினர் பலியாகி 36 பேர் காயமடைந்தமை தெரிந்ததே. (71)

## கிழக்கின்...

டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ரெலோ குழுவினருக்கு ரி- 56 ரக துப்பாக்கிகளுடன் கிராமங்களுக்கு கிராமங்கள் தொடர்பு கொள்ள தொலைபேசி வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வருடம் ஜூலையில் கிழக்கில் தாம் எடுத்த இராணுவ நடவடிக்கையினால் அப்பகுதி அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு இதுவரை கூறிவந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தொலைக்கல்வி விண்ணப்பங்கள் தவறாக நிரப்பி அனுப்பப்பட்டுள்ளன

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெறுவதற்காக விண்ணப்பித்த பயிலுநர் ஆசிரியர்களினால் பிழையாகநிரப்பி அனுப்பப்பட்ட பெருமளவு விண்ணப்பங்கள் யாழ் மாவட்டத் தொலைக்கல்வி பிரிவுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது

விண்ணபபித்த பயிலுநர் ஆசிரியர்கள் இவற்றை இம் மாதம் 11 ந் திகதிக்கும் 16 ந் திகதிக்கு மிடையில் காலை 10 மணிக்கும் 1.30 மணிக்கு மிடையில் நேரில்வந்து பெற்று திருத்தி திருப்பி அனுப்புமாறு யாழ் மாவட்டத் தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்தார், (ப5)

## தினேஷ் குணவர்த்தனா

# ஐ. தே. க. அமைச்சர்கள் போல் 1983 க்கு முன் யாரும் நடக்கவில்லை

'எனது தந்தை பிலிப் குணவர்த்தனா இனக் கலவரத்தின் போது சட்டத்தரணி நடேசன், தங்கராஜா போன்ற தமிழ்ப் பிரமுகர்களைப் பாதுகாத்தார் என்று மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கூறினார்.

1983 இல் ஐ. தே. க. அமைச்சர்கள் நடந்து கொண்டதுபோல அதற்கு முன்னர் அமைச்சர் எவருமே நடந்து கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (ப 6)

# மக்கள் வங்கிக்கு கொண்டு சென்ற 22 லட்சத்து 70 ஆயிரம் ரூபா கொள்ளை

மொனராகல மக்கள் வங்கியில் 22 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பணத்தை வைப்பிலிட சென்றகூட்டுறவுச் சங்க காசாளர் தாக்கப்பட்டு, அவரது பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

ஆயுதம் தாங்கிய மூவர் இதனைச் செய்த பின்னர் சைக்கிளில் தப்பியோடிவிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ப6)

## பூப்புனித...

எஸ். வரதராசா (41) காயமடைந்தார் ஐந்து வீடுகள் சேதமடைந்தன. அவ் வைபவத்தில் கலந்து கொண்ட ஏனையோர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். விழாவிற்கு தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த பலகாரங்கள் சிதறிக் காணப்பட்டன (ப- 14)

## சங்குவேலியிலும்...

பலத்த காயம் ஏற்பட்ட நிலையிலும் மோ. தாரணி (8வயது) உடலில் காயம் ஏற்பட்ட நிலையிலும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இக்குண்டு வீச்சால் 2 வீடுகள் பாரிய சேதமடைந்ததோடு மொத்தம் 5 வீடுகள் சேதமடைந்தன. ஒரு குண்டு வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது. (ப. 10)

# சிறுவனிடம் திருட்டு

நேற்று நல்லூர் நாவலர் வீதியில் உள்ள கடை ஒன்றிலிருந்து தேங்காய் எண்ணெய் வாங்கிக் கொண்டு சென்ற சிறுவனை முதியவர் ஒருவர் பயமுறுத்தி பறித்த பொழுது சிறுவன் கத்தியபோதும் "அந்த வயோதிப" திருடனைப் பிடிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (70)

## அம்புலன்ஸில்...

கொண்டுவரும்படி கேட்டதாம். இந்த அவல நிலையைக் கண்ட அங்கு உள்ள வர்த்தகர் ஒருவர் தனது சொந்த செலவில் அக் குழந்தையை அனுப்பிவைத்தார்.

அந்த ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளர் நலன்புரிச் சங்கம் ஒன்றும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது இத்தனைக்கும் இக் குழந்தை ஒரு வைத்திய சாலை அம்புலன்ஸ் சாரதியின் மகனாகும், எனக் கூறப்படுகிறது. (ப 5)